**ஏறாவூர் நகர சபை -2023**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

ஏறாவூர் நகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபை கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 181(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஏறாவூர் நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

ஏறாவூர் நகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் ஏறாவூர் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதாரத் தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுக்ள மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.
- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது ஏறாவூர் நகர சபையின செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நகர சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

**1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிராகரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டுக்கான நிலையான வைப்பு வட்டி வருமானங்களின் கூட்டுமொத்தமான ரூபா 319,880 தொகை நிதிக்கூற்றுக்களில் வட்டி வருமானமாக காட்டப்பட்டிருக்கவில்லை. | இனிவரும் காலங்களில் பெற வேண்டிய வட்டி வருமானமாக காட்டப்படும். | ஆண்டிற்கான பெறவேண்டிய வருமானங்கள் கணக்குகளில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.6.2 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 237,953,471 பெறுமதியான 06 மீதிகளுடன் தொடர்புடைய நிலையான சொத்துப் பதிவேடு, உரிமையை உறுதிப்படுத்தும் பதிவேடுகள், முற்பணப் பதிவேடு மற்றும் ஏனைய பதிவேடுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | காணி கட்டடங்கள் பொறி, மோட்டார் வாகனங்கள், தளபாடங்கள் போன்ற நிலையான சொத்துக்களின் பெறுமதியை மதிப்பிடுவதற்கும் வாகனங்களின் உரிமையை மாற்றம் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | சொத்துக்களுக்கான எழுத்து மூலச் சான்றுகளை பெற்றுக்கொள்ளவும் பதிவேடுகளில் பதிவு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.7 இணக்கமின்மைகள்**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 255) | | | |
| | (i) 44,46 மற்றும் 49 பிரிவு | சபையின் பராமரிப்பில் காணப்படும் 628 வீதிகளை வர்த்தமான பத்திரிகைகளில் பிரசுரிப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரைக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | பதிலில்லை | வீதிகளை வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | (ii) 170 (1), (2) பிரிவு | மீளாய்வாண்டு இறுதி வரை மதிப்பிடப்பட்ட 10,807 அசையாத ஆதனங்களில் ரூபா 10,000 இற்கும் மேற்பட்ட ரூபா 6,063,395 நிலுவையைக் கொண்ட 304 ஆதன உரிமையாளர்களிட மிருந்து ஆதன வரி நிலுவையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | ஆதனவரி செலுத்தாத ஆதன வரியிறுப்பாளர்களிட மிருந்து குப்பைகள் அகற்றுவதை நிறுத்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. | ஆதன உரிமையாளர் களிடமிருந்து ஆதன வரி நிலுவையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | | |
| | (i) இல.371(2)(a) | சபையில் 1988 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் அண்டு வரையிலும் முற்பண நிலுவைகளாக காணப்படுகின்ற ரூபா 399,386 தொகைகளை உரியவர்களிமிருந்து அறவீடு செய்வதற்கான | முற்பணங்களை சீர்செய்வதற்கான நடவடிக்கைகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றோம். | முற்பண கொடுப்பனவுகளை இனங்கண்டு அவற்றினை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்பட்டிருக்க வில்லை. | | வேண்டும். |
| (ii) இல.571(1), (2), (3) | இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலங்கடந்த 11 வகையான ரூபா 2,536,116 வைப்புக்கள் தொடர்பில் சபை உரிய நபர்களுக்கு திருப்பிக் கொடுக்கவோ அல்லது வருமானக் கணக்கிற்கு மாற்றவோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | 2 வருடங்களுக்கு மேற்பட்ட வைப்புக்கள் வருமானத்திற்கு மாற்றப்பட்டுள்ளதுடன் உரியவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. அலுவலக | காலங்கடந்த வைப்புக்களை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 6,849,118 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 8,726,921 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 13,393,510 | 37,471,865 | 15,228,233 | 22,243,632 | 11,311,941 | 11,877,209 | 12,035,593 | 20,632,517 |
| வாடகை | 13,510,800 | 11,530,679 | 5,876,910 | 5,653,769 | 14,130,400 | 4,898,114 | 4,580,713 | 5,973,759 |
| உத்தரவுப் பத்திரக் கட்டணம் | 11,074,000 | 5,521,180 | 5,407,180 | 114,000 | 3,650,000 | 2,754,705 | 2,754,705 | - |
| ஏனைய வருமானம் | 16,731,850 | 18,426,088 | 15,738,024 | 2,688,064 | 27,589,466 | 104,382,212 | 104,273,416 | 8,875,257 |
| | 54,710,160 | 72,949,812 | 42,250,347 | 30,699,465 | 56,681, 807 | 123,912,240 | 123,644,427 | 35,481,533 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரியும் வரியும்** | | |
| (i) | மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட ஆதனவரி ரூபா 37,471,865 தொகையில் ரூபா 15,228,233 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. | பதிலில்லை | ஆதனவரி நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (ii) | 2013 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையில் 34 கோழி இறைச்சி கடைகளிடமிருந்து அறவிட வேண்டிய கழிவகற்றல் வரி ரூபா 484,547 மற்றும் தமாஷா வரி ரூபா 177,857 தொகைகளினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இறப்பு மற்றும் வெளிநாடு சென்ற காரணத்தினால் இந்நிலுவைகளை அறவீடு செய்வதற்கான சாத்தியப்பாடுகள் குறைவாகவே காணப்படுகின்றது. | உரிய தொகைகளை உரிய காலத்தில் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(ஆ)** | **வாடகை** | | |
| (i) | ஏறாவூர் புதிய சந்தையிலுள்ள சந்தை கட்டிடத் தொகுதியில் அமைந்துள்ள கடையறைகளினை வாடகைக்கு வழங்கியமை தொடர்பில் 15 வாடகைதாரர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 311,350 தொகையினை 5 வருடங்களிற்கு மேலாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவையினை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | வாடகை நிலுவையினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | 2012 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையான 16 மாட்டிறைச்சிக் கடைகள், 02 ஆட்டிறைச்சிக் கடைகள் மற்றும் 12 கோழி இறைச்சிக் கடைகளிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 747,523 வாடகை நிலுவைத் தொகையினை அறவீடு செய்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இத் தொகைகளை அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | நீண்ட கால இறைச்சிக் கடை குத்தகை நிலுவையினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆந் திகதி வரை கேள்வி மீதான பொதுச் சந்தை மற்றும் பெண்கள் சந்தை குத்தகை வழங்கலிருந்து பெறவேண்டிய ரூபா 5,067,459 தொகை கடந்த 02 வருடத்திற்கும் மேலாக அறவிடப்படாமல் காணப்பட்டிருந்தன. | நபர்களின் அடையாளப்படுத்தல் சிக்கல் காரணமாக இந் நிலுவையினை அறவிடுவது கடினமாகவுள்ளது. | குத்தகை நிலுவையினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(இ)** | மீளாய்வாண்டிற்கான வியாபார உத்தரவுப் பத்திரக் கட்டணம் ரூபா 114,000 மற்றும் தொலைத்தொடர்பு கோபுரத்திற்கான வியாபார உரிமக் கட்டணமான ரூபா 45,000 தொகைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வியாபார உரிமக் கட்டணத்தினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வியாபார உத்தரவுப் பத்திரக் கட்டண நிலுவைகளை உரியவர்களிட மிருந்து அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| **(ஈ)** | 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் ஆடு மற்றும் மாடுகளின் தோல்கள் விற்பனை செய்யப்பட்டமை தொடர்பில் நபர் ஒருவரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 141,000 தொகையினை 3 வருடங்களிற்கு மேலாக அறவிடுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவையில் சிறு பகுதியினை செலுத்துவதாக அறிவித்துள்ளார். | ஆடு மற்றும் மாடுகளின் தோல்கள் விற்பனை வருமானத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 1952 ஒக்தோபர் 03 ஆந் திகதியும் 10459 ஆம் இலக்கமும் கொண்ட வர்த்தமான பத்திரிகை மூலம் யு 1695 ஆம் இலக்க வரைபடத்தின் மூலம் ஏறாவூர் நகர சபையினால் சுவீகரிக்கப்பட்ட ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தின் கட்டடம் அமைந்துள்ள காணியினை முறையாக அந் நிறுவனத்தினத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்கு அல்லது இக் காணியினை சட்ட நடவடிக்கை மூலம் மீட்பதற்கு சபையினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் அவர்களின் பதில் கிடைக்கப்பெறும் பட்சத்தில், குறிப்பிட்ட நிறுவனம் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். | காணியை குத்தகைக்கு வழங்க அல்லது ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தின் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2017 ஆம் ஆண்டில் பாராளுமன்ற பொதுக் கணக்குக் குழுவினால் (COPA) சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களான அதிகாரமளிக்கப்படாத அலுவலகக் கட்டிடத்தின் நிர்மானம் மற்றும் கலாச்சார மண்டபம் வாடகைக்கு வழங்கியமை தொடர்பான பரிந்துரைகளினை கடந்த 06 வருட காலமாக நிவர்த்தி செய்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலில்லை | பாராளுமன்ற பொதுக் கணக்குக் குழுவினால் (COPA) சுட்டிக்காட்டபட்ட விடயங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | பழைய சந்தையிலுள்ள 33 கடைக்காரர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மின்சாரக் கட்டணம் ரூபா 367,250 தொகையினை மீளாய்வாண்டு இறுதிவரை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிமையாளர்களிடமிருந்து இந்நிலுவைகளை அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்படும். | மின்சாரக் கட்டணத்தினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மின்சார சபைக்கு முற்பணமாக செலுத்திய ரூபா 786,122 தொகையினை அறவிட்டுக் கொள்வதற்கான நடவடிக்கை நீண்ட காலமாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பதிலில்லை | மின்சார சபைக்கு முற்பணமாக செலுத்திய தொகையினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| (அ) வேறு அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களின் பெயரிலுள்ள 02 வாகனங்களின் உரிமையினை மாற்றுவதற்கும் மற்றும் அதன் பெறுமதிகளினை கணிப்பிட்டு கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெயர் மாற்றம் செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | சொத்துக்களின் உரிமையினை மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) சபைக்கு சொந்தமான நீண்டகாலமாக பழுதடைந்த நிலையிலுள்ள 05 வாகனங்களை திருத்தம் செய்ய அல்லது ஏலத்தில் விற்பனை செய்வதற்கு கடந்த 05 வருட காலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நீண்ட காலமாக திருத்தம் செய்ய முடியாத வாகனங்களை அகற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | பழுதடைந்த வாகனங்களை திருத்தம் செய்ய அல்லது விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
| --- | --- | --- |
| ஆரம்பநிலைமட்டத்தில் 23 பதவி வெற்றிடங்களும் இரண்டாம் நிலை மட்டத்தில் 10 பதவி வெற்றிடங்களுமாக மொத்தமாக 33 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படாமையினால் சபையினால் பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவைகள் பலவீனமான முறையில் காணப்பட்டிருந்தன. | பதவி வெற்றிடத் தகவல்கள் மாதாந்தம உயர் அதிகாரிகளுக்கு் அனுப்பப்படுகின்றன. | ஆளணி வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 சுற்றாடல் பிரச்சினை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சு |
| --- | --- | --- |
| 1988 இன் 56 ஆம் இலக்க சட்டத்தினாலும் 2000 இன் 53 ஆம் இலக்க சட்டத்தினாலும், 2008 இன் 01 ஆம் இலக்க சட்டத்தினாலும் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டம் மற்றும் 2022 சனவரி 27ஆம் திகதியிடப்பட்ட 2264/18 ஆம் இலக்க விஷேட வர்த்தமானியின் "ஆ" பிரிவின் பிரகாரம் விலங்கறுமனைன் திண்மக் கழிவு நிலையம் மற்றும் 27 வெதுப்பகங்களுக்கு சுற்றாடல் அனுமதிப்பத்திரங்கள் சபையினால் பெறப்பட்டிருக்கவில்லை. | விலங்கறுமனை மற்றும் திண்மகக்கழிவு நிலையத்துக்கான மற்றும் 27 வெதுப்பகங்களுக்கு சுற்றாடல் அனுமதிப்பத்திரங்களை பெறுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | விலங்கறுமனை மற்றும் திண்மக்கழிவு நிலையம் மற்றும் வெதுப்பகங்களுக்கு சுற்றாடல் அனுமதிப் பத்திரங்களை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |